# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண். 57/2020

வா.சா.1– குறுக்கு விசாரணை – நாள் 23–10–2025.

பெயர் = கோவிந்தராஜ் வா.சா.–1

வா.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் கு.வி.–

(1) தாவா சொத்தின் சர்வே எண். 107/215C. அதன் உரிமையாளர் ஆதியில் நம்மாழ்வார் நாயக்கர் என்றால் சரிதான். நம்மாழ்வார் நாயக்கரின் பாத்தியம் தற்போது பிரதிவாதி பிரேமலதாவிற்கு வந்துவிட்டது என்றால் சரிதான். நம்மாழ்வார் நாயக்கரும் பிரேமலதாவும் எனக்கு கிரையம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். தாவா சர்வே எண்ணில் நம்மாழ்வார் நாயக்கர் 3 பகுதிகளாக வைத்திருந்தார் என்றால் சரிதான். 1 பகுதி வடக்கே 1 பகுதி தெற்கே மற்றொரு பகுதி வடகிழக்கே என்றால் சரிதான். வடகிழக்கு பகுதிக்கு சென்றுவர 3 அடி அகலத்தில் பாதை உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி பாதை எனக்கு சொந்தமானது அல்ல. பிரதிவாதிக்கும் எங்களுக்கும் பொது பாதை என சாட்சி கூறுகிறார்.

(2) பொது பாதைக்கு நானும் இடம் விடவில்லை. நம்மாழ்வார் நாயக்கரும் இடம் விடவில்லை என்றால் சரிதான். மேற்படி இருவரும் இடம் விடவில்லை என்றால் அது சர்கார் பாதையா என்றால் ஆமாம். பிராதில் தாவா பாதையை சர்கார் பாதை என்று சொல்லியுள்ளோமா என்றால் இல்லை. பொது பாதை என சொல்லியுள்ளேன் என சாட்சி கூறுகிறார். சர்காரை இந்த வழக்கில் நான் பார்ட்டியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஐ எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் பொது பாதையில் வீடு கட்ட முயன்றதால் முன்னோர்களின் அனுபவத்தை காண்பிப்பதற்காக அதனை தாக்கல் செய்தேன் என சாட்சி கூறுகிறார்.

(3) வா.சா.ஆ.1 யார் யாருக்கு எழுதிகொடுத்தது என்று தெரியுமா என்றால் தெரியும். மன்னாரசாமி, கொண்டல்சாமி, அழகர்சாமி மூவரும்

சேர்ந்து நம்மாழ்வார் நாயக்கரின் தந்தை திருவேங்கடப்பநாயக்கருக்கு எழுதிகொடுத்துள்ளார்கள். வா.சா.ஆ.1ல் உள்ள எழுத்துக்களை படிக்க முடியுமா என்றால் தாவா இடத்தை மட்டும் படிக்கமுடியும் என சாட்சி கூறுகிறார். சின்னச்சாமி என்ற நாரணப்ப நாயக்கரின் இடம் தாவா சொத்திற்கு தெற்கு பக்கம் உள்ளது. வா.சா.ஆ.1ல் மூன்று பகுதிகளாக நம்மாழ்வார் நாயக்கரின் இடம் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் மூன்று பகுதிகள் போக தெருக்களும் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பத்திரம் எழுதிகொடுத்த நபரால் தெரு பாதை விடப்பட்டதா என்றால் இல்லை. பொதுவாக தெரு என்று இருந்தால் அது அரசாங்கத்திற்கும், ஊராட்சிக்கும் பாத்தியப்பட்டதாக தான் இருக்கும் என்றால் சரிதான். தனிப்பட்ட நபர்கள் சொந்த புழக்கத்திற்காக இடம் விட்டால் அது அரசாங்க தெருவாக வராது என்றால் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S